©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 28, 2011
புரட்டாசி 11, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 12/2011.**

**1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் "முப்பத்து ஐந்து ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "முப்பத்து ஐந்து ஆண்டுகள் எட்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 13/2011.**

**2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய, அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

நீக்கம்.

**2.** 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு சட்டம் 29/2006.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியத்தில் சேர்ந்துள்ள தொகைகளை மாற்றம் செய்தல்.

**3.** இச்சட்டம் தொடங்கிய தேதியன்று தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட தொகையானது, அரசினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற நிதியத்திற்கு அல்லது கணக்கிற்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 14/2011.**

**2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 2/2008. 2. 2008—ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டம் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.